தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 9, பவ - திருவள்ளுவர் ஆண்டு–2025

1994 ஏப்ரல் 22, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு"

மது குடியன் ஒருவன் தான் குடிக்காதிருக்கும்போது, அந்த சில நேரத்திலாவது, குடித்து விட்டு மயங்கிக் கிடக்கும் இன்னொருவனைப் பார்க்கும் போதாகிலும், தானும் அதுபோலவே தானே கிடந்திருப்போம் என்பதை எண்ணிப் பார்ப்பானேயாயின், எதிர்காலத்திலாவது அவன் குடிக்காமல் இருப்பான் அல்லவா?

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 341, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

341—

தொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தல்

**23384— திரு. என். ஆர். சிவபதி :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்பதற்காக முயற்சிகள் 1991 ஆம்

ஆண்டு முதல் செய்யப்பட்டு வருகின்றன. அதற்காக நிலங்களும் பொது மக்களால் அரசுத் துறைக்கு பதிவு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளது. அதற்கான ஆய்வு வேலைகள் கூட அதிகாரிகளால் முடிக்கப்பட்டு இப்போது தயார் நிலையில் உள்ளது என அறிகிறேன். இந்த நிலையில் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த இந்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் உரிமை கொடுத்து 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமான ஆய்வுகளை துறை நடத்தி வருகிறது. ஆனால் இந்த ஆண்டு எடுத்துக்கொள்கிற வாய்ப்பு இல்லை. இருந்தாலும் கூட அடுத்த ஆண்டு இதைப்பற்றி ஆய்வு செய்து நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் அனைத்து பூர்வாங்க வேலைகளும் முடிக்கப்பட்டுவிட்டன. அடுத்த ஆண்டில் ஏற்படுத்தித் தருவதாகச் சொன்னார்கள். இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டில் ஒதுக்கித் தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த நிதி ஆண்டுக்கு உண்டான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. எனவேதான் இந்த நிதி ஆண்டில் சேர்ப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று நான் தெரிவித்தேன். இருந்தாலும் இதை முழுமையாக ஆய்வு செய்து அடுத்த ஆண்டிலே அந்தப் பட்டியலிலே முன்னுரிமை அடிப்படையிலே நாம் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே அதனுடைய உரிமை எந்த இடத்திலே வருகிறது என்பதையும் பார்த்து, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 342, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

342—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுதல்.

***23825**— டாக்டர் ஜெ. பரந்தாமன் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—